கோதுமை குறைவாகக் கிடைத்தது. அப்படிப்பட்ட நேரங்களில் குறைவாகக் கொடுக்கப்பட்ட கோதுமையையாவது மற்ற மாநிலங்களுக்குப் போகாமல் இருக்கும்படி கண்காணிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தற்சமயம் அந்த நிலைமை இல்லை.

Textool company at Coimbatore

* 518 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to take over the Textool company in Coimbatore; and,

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) கோயம்புத்தூர், டெக்ஸ்டூல் கம்பெனியை மீண்டும் இயங்கச் செய்யும் பொருட்டு இயக்குநர்கள் வாரிய இசைவுடன் அந்த நிறுவனத்தின் நிர்வாகத்தை அரசு மேற்கொண்டுள்ளது. இந்த நிறுவனத்தின் இயக்குநர்கள் வாரியம் அரசின் முதுநிலை அதிகாரி ஒருவரது தலைமையின்கீழ் அரசால் மாற்றியமைக்கப்பட்டது. தமிழ்நாடு 1969-ம் ஆண்டு துயர் தணிப்பு (தனி விதித்துறைகள்) நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் இந்த நிறுவனத்தை 13—8—1972 வரை ஒரு துயர்தணிப்பு நிறுவனமாகவும் அரசு அறிவித்துள்ளது. மேலும், இந்நிறுவனம் வங்கிக்கடன்கள் நீங்கலாக ஒரு தரப்பாக உள்ள ஒப்பந்தங்கள், சொத்தின் மீதான ஈட்டுறுதிகள், உடன்படிக்கைகள் ஏனைய ஆவணங்கள் முதலிய யாவும் அவற்றின்கீழ் சேர்ந்து வரும் அல்லது எழுகிற உரிமைகள், சிறப்புரிமைகள், கடமைகள்,பொறுப்புக்கள் முதலிய யாவற்றின் செய்திறனையும் அரசு நிறுத்தி வைத்துள்ளது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் அரசு இந்த நிறுவனத்துக்கு நிதி உதவி வழங்கியுள்ளது. அது இப்போது நன்கு செயல்பட்டு ஆதாயத்தில் இயங்கி வருகின்றது.

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவரவர்களே, இதற்கு நிதி உதவி அளித்ததாக அமைச்சரவர்கள் கூறினார்கள். இது லோனாகக் கொடுக்கப்பட்டதா அல்லது சப்சிடியாக வழங்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாம் பேங்க் கியாரண்டி மூலம் பண உதவி செய்து வருகிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், டெக்ஸ்டூல் கம்பெனி திறந்த பிறகு ஆதாயத்தில் நடக்கின்றது. ஆகவே, ஏற்கனவே தொழிலாளர்களிடமிருந்து பிடிக்கப்பட்ட பணத்தை மற்ற மில் தொழிலாளர்களுக்கு கோவையிலே கொடுப்பதைப்போன்று கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாடு இண்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பொரேஷன் பணம் கொடுத்திருக்கிறது. நாம் கியாரண்டி கொடுக்கிறோம். ஒவ்வொரு ஆண்டிலும் நிறுவனத்தின் கணக்கைப்பார்த்து இதுபோன்று திருப்பிக் கொடுக்க வாய்ப்பிருந்தால் தொழிலாளர்களுக்குத் திருப்பிக் கொடுக்கும்படி முடிவு எடுக்கப்படுகிறது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, இந்த டெக்ஸ்டைல் கம்பெனியை எவ்வளவு ஆண்டுக்காலமாக மூடிவிட்டார்கள்? இந்த அரசாங்கம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் அதை ஏற்று நடத்துகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நீண்ட நாட்களாக அந்த நிறுவனம் சரியாக நடைபெறாமல் கொஞ்சங்கொஞ்சமாக வேலையிலிருந்து தொழிலாளர்களை அனுப்பிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று நல்லெண்ணத்தின் அடிப்படையில் இது திறக்கப்பட்டது.

தஞ்சாவூரிலுள்ள சைக்கிள் தொழிற்சாலை

*519 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூரில் ஏற்படுத்தப்பட்ட சைக்கிள் தொழிற்சாலை இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்றதா?

(இ) ஆம் எனில், அதன் உற்பத்தியளவென்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) கடந்த மூன்று ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட சைக்கிள்களின் எண்ணிக்கை பின்வருமாறு—

1968-69	650.
1969-70 . . .	இல்லை.
1970-71	78.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே, தஞ்சையிலுள்ள சைக்கிள் தொழிற்சாலை லாபத்தில் இயங்குகிறதா அல்லது நஷ்டத்தில் இயங்குகிறதா? அதனுடைய விவரத்தை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சைக்கிள் உற்பத்தி அங்கே செய்யப்படவில்லை. சைக்கிள் ஸ்பேர் பார்ட்ஸ்களை வாங்கி அதை அசெம்பிள் செய்ய பயன்படுத்தினார்கள். இப்போதைக்கு ஏராளமாக தேக்கமிருப்பதால் சைக்கிள் அசெம்பிளிங் தொழிற்சாலைகளையெல்லாம் 'டைவர்சிபிகேஷன்' வேறுமுறை உற்பத்தியில் செல்லும்படி நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்த தஞ்சாவூர் நிறுவனத்தைப் பொறுத்தவரையில் பெரும்பாலும் லாபத்திலே ஓடி வருகிறது.

திரு. அ. தேவந்திரன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதைப் போன்ற தொழிற்சாலைகளை தஞ்சை மாவட்டத்தில் மிகவும் பின் தங்கிய பகுதிகளில் ஆரம்பிக்கின்ற எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கனம் அங்கத்தினர் அவர்களுடைய தொகுதியில் அவர்கள் முயற்சியெடுத்துக்கொண்டால் உதவி செய்யப்படும்.

கரப்பூண்டி அருகில் சர்க்கரை ஆலை

*520 வினா—**திரு. தொ. ப. சீனிவாசன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, கரப்பூண்டி கிராமம் அருகில் தனியார் துறையில் சர்க்கரை ஆலை ஒன்று துவங்க அனுமதி கேட்டு யாரேனும் மனுச் செய்தார்களா?